அப்படி உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களிலேயே இப்போது போதுமான அளவிற்கு அடிப்படை வசதிகள் செய்ய முடியாமல் நாம் நிதி ஆதாரத்திற்கு சிரமப்பட்டுக் கொண்டிருக் கிறோம். இந்த நாகப்பட்டிணம், வேளாங்கண்ணி பகுதியில் ஆண்டு முழுவதும் மக்கள் வருகிறார்களா என்று நாம் பார்க்க வேண்டும். சில திருவிழாக்களையொட்டி அங்கே இலட்சக்கணக் கான மக்கள் கூடுகிறார்கள். அதை அடிப்படையாக வைத்து நிரந்தரமான அமைப்புகள் ஏற்படுத்துவதற்கு இன்றைய பொரு ளாதார சூழ்நிலையில் அது கஷ்டமாக இருக்கும். ஆகவே அங் கிருக்கிற அடிப்படை வசதியையெல்லாம் கணக்கிலெடுத்து கூடிய விரைவில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதன் பொருளாதார சக்திக்கேற்றவாறு ஒரு தங்கும் இட வசதியை ஏற்படுத்த முடியுமா என்பதைப் பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

நாகர்கோவிலில் வானொலி நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 611—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் ரேடியோ நிலையம் அமைப்பதில் மாநில அரசு இன்னும் இடஒதுக்கீடு செய்யாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) நாகர்கோவிலில் வானொலி நிலையம் அமைப்பதற்கு வானொலித் துறைக்கு தகுந்த இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு, மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கேட்கப்பட்டிருக்கும் நிலம், மற்றும் அதிலுள்ள கட்டிடங்களின் விலை மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரையில் இதற்கான முடிவு மேற் கொள்ளப்படும்.

திரு. மி. வின்சென்ட் : ரேடியோ நிலையம் எந்த அளவிற்கு மக்களுக்கு முக்கியமானது என்பதை உணர்ந்து நாகர்கோவிலில் ரேடியோ நிலையம் அமைக்க இடம் ஒதுக்கி மற்ற அனைத்துத் தேவைகளையும் உடனடியாக செய்து வேகமாக அந்தப் பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ரேடியோ நிலையம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எண்ணித்தான் மாநில அரசு மத்திய அரசைக் கோரி அதை அமைக்க

1982 மார்ச் 23]

வேண்டுமென்கிற அவர்கள் அனுமதியைப் பெற்றிருக்கிறது. ஆனால் அங்கே ஏற்ற இடம் கண்டுபிடிப்பதில் இவ்வளவு நாள் சிரமம் இருக்கிறது. இப்போது தகுதியான இடம் தேர்ந்தெடுக்கப்பெற்றிருக்கிறது. அந்த இடம் டான்சிக்கு சொந்தமாகயிருந்தது. அவர்களோடு பேசி, அதில் பல கட்டடங்கள் எல்லாம் இருக்கின்றன. அதன் முதலீடு எவ்வளவு என்று நிர்ணயிப்பதற்கு அதில் தாமதமாகிக் கொண்டிக்கிறது. விரைவில் அவையெல்லாம் முடிவு செய்யப்பட்டு அந்த இடத்தை வானொலித்துறைக்கு மாநில அரசு வாங்கிக் கொடுக்கிற முயற்சியில் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்செண்ட் : நாகர்கோவில் வானொலி நிலையத்தை சக்திவாய்ந்த ஒரு நிலையமாக அமைக்க மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதை இப்போது மாவட்ட அளவில் ஒரு வானொலி நிலையமாக அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது, அது வந்த பிறகு அதை சக்தி வாய்ந்ததாக ஆக்குகிற முயற்சியில் ஈடுபடலாம்.

திரு. இ. முத்து இராமலிங்கம் : நெல்லை, குமரி மாவட்டங்களில் சென்னை வானொலி நிலையத்தில் ஒலிபரப்புகிற நிகழ்ச்சிகளைக் கேட்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி அதன் வானொலித்திறனை கூட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சென்னை வானொலியைக் கேட்க வேண்டிய அளவிற்கு அவசியம் இல்லாத வகையில் மதுரையில் ஒரு சக்திவாய்ந்த வானொலி நிலையம் அமைய இருக்கிறது. அதைபோல் திருநெல்வேலியில் இப்போது ஒரு ஒலி பரப்பு நிலையம் இருக்கிறது. அந்த நிலையம் தன்னளவில் இயங்குகிற நிலையமாக மாற்றுகிற திட்டமும் இருக்கிறது. அவைகளுக்கெல்லாம் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு மத்திய அரசின் செய்தி ஒலிபரப்பு துறையிடம் ஒப்படைத்தும் ஆகிவிட்டது. மற்ற கட்டட வேலைகளையெல்லாம் மத்திய அரசு இப்போது துவக்கிக் கொண்டிக்கிறது.